# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

சித்திரைத் திருவாதிரை நம் நெஞ்சில் முத்திரை பதித்துச் சென்றிருக்கிறது– உடையவரின் அவதார நினைவுகளால், ஆயிரம் ஆண்டுகள் நிறையப் போகின்றன, அந்தமஹான் வந்து போய்! 'எம்முடன் தொடர்புடையோருக்கும் அவர்களுடன் உள்ள சம்பந்தி சம்பந்திகளுக் கும் உம் அருள் வேண்டும்' என்று திருவரங்க னிடம் நமக்காக மடியேந்திய அந்த மஹாபுருஷர் கத்யத்ரயத்திலே 'பகவதபசாரம், பாகவதபசாரம், அஸஹ்ய அபச்சாரம்' என மூன்று பயங்கரங்களைப் பற்றி நம்மை எச்சரித்து விட்டுப் போனார். அதனால் தானோ என்னவோ இந்த மூன்று விஷயங்களிலுமே நாம் கணகில்லாத சாதனைகள் செய்து கொண்டு இருக்கிறோம்.

ஒரு வைணவன் எப்படி வாழவேண்டும், என்று வாழ்ந்து காட்டியவர்கள் நம் ஆசார்ய பரம்பரையினர். தன்னை ஏசியவரைத் தாள் பணிந்து தன் ஸாத்விக குணத்தால் தன்னை வெகுண்டவரே 'உலகாசிரியர்' என்று பாராட்டும்படி செய்த லோகாசாரியர் என்ன, 'ஊருக்குப் பொல்லான் எனக்கு நல்லான்' என்று பெருமாளே பாராட்டிய நல்லான் சக்கரவர்த்தி என்ன, மாறனேர்நம்பி விஷயத்தில் நடந்தது முற்றிலும் சரியே என்று எம்பெருமான் ஊருக்குப் பறைசாற்ற வாழ்ந்து காட்டிய பெரிய நம்பிகள் என்ன, ஸ்நான சுத்தராய் காவிரியிலிருந்து உடையவர் திரும்பும் போது அவர் திருக்கரந்தாங்கும் புனிதராய் வாழ்ந்த பிள்ளை உறங்காவில்லிதாஸர் என்ன, நம்மாழ்வார் அர்ச்சாமேனியைக் காக்க இன்னுயிர் ஈந்த தோழப்பர் என்ன, – இப்படி நடமாடும் பெருமாள் கோவில்களாக இவ்பூவுலகில் உலவியருளிய இந்த உத்தம வைஷ்ணவர்கள் சுவாசித்த அதே காற்றை சுவாசித்துக் கொண்டு அவர்கள் மிதித்தருளிய அதே மண்ணில் நடந்து கொண்டு தான் நாமும் காலத்தை ஒட்டிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் நம்தரம் என்ன? அவர்கள் தரம் என்ன? ஒரு ஆயிரம் வருடம் கூட பூர்த்தியாவதற்குள் ஸ்ரீவைஷ்ணவம் என்ற அழகு மாளிகை சிதைந்து சிதிலமடைந்து, பாழடைந்த காட்டு பங்களா ஆகிக் கொண்டிருக்கிறது.

'நான் ஒரு வைணவன்' என்று சொல்லிக் கொள்வதற்கு அடிப்படைத் தேவையான சாத்திர அறிவு இன்று எத்தனை பேருக்கு இருக்கிறது? பாசுரங்களில் எத்தனை தெரியும்? ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி முதலிய எண்ணிக்கை எந்த அடிப்படையில் கணக்கிடப் படுகிறதென்று எத்தனை பேருக்குத் தெரியும்? பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீராமானுஜருக்கு முற்பட்டவரா பிற்பட்டவரா என்று வினவிக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? இவற்றைப் படிக்காதவர்கள் அதை உபகரித்த முன்னோர்களை அவமதிக்கிறார்கள் என்ற உண்மையை எத்தனை பேர் உணர்கிறார்கள்?

'அடியேன் ராமானுஜதாஸன்' என்று சொல்லிக் கொள்வதால் மட்டும் ஸ்ரீவைகுண்டம் கிட்டப் போவதில்லை வைணவம் எழுத்தளவில் நிற்காமல் நடைமுறைக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் கூரத்தாழ்வான் கண்ணையும், பெரிய நம்பிகள் உயிரையும் இழந்தார்கள்; பாஷ்யகாரர் பன்னீராண்டு வெள்ளை சாத்தி மறைந்து வாழ்ந்தார்; முதியோர் தேடிக் கொடுத்த தங்கப் புதையலை சாக்கடையில் வீசிவிட்டு புதிதாக பணம்

சம்பாதிக்க போகும் பைத்தியக்காரப் பேரனைப் போல 'எழுத்தொன்று ஏழு லட்சம் பெறும்' என்கிற மாதிரி வியாக்யானங்களையும் வரலாறுகளையும் திவ்ய பாசுரங்களையும் புரட்டிக் கூடப் பார்க்காமல் புதிது புதிதாக முளைத்தெழும் உலகாயத நூல்களை பாரம் பாரமாக சுமந்து திரியும் இன்றைய சமுதாயம் 'அபராத ஸஹஸ்ர பாஜனம்' என்ற குற்றச் சுமைக்குழிகள் என்பதில் ஐயமென்ன?

வைணவர்கள் தமக்குள் கொள்ளும் காழ்ப்பு, ஞானாசிரியர்களுக்கு சீடர்கள் காட்டும் அவமதிப்பு, பகவத் விஷயத்தில் இளைஞர்கள் காட்டும் அலட்சியம், இவையெல்லாம் ஆத்மாவை நித்தியத்துக்கும் படுகுழியில் தள்ளும் நீசக்காரியங்கள் என்று அஞ்சித் தானே கத்யத்ரயத்தில் எம்பெருமானார் அப்படிக் கதறினார்! இவற்றிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ளத்தானே பூர்வர்கள் சாத்திரங்களை உபகரித்தருளினார்கள்! வார்த்தாமாலை ஒன்று போதுமே வைணவனை வாழ்விக்க! குருபரம்பராப்ரபாவம் காட்டுமே கோவிந்தன் திருவடியடையும் கோடியுக்திகள். இவற்றைக் கட்டாயக் கல்வியாக்கி இளைய தலைமுறையை உருப்படியாக்க எம்பெருமான் என்ன திட்டம் வைத்திருக்கிறானோ?!

எம்பார் தம்தலைமீது உடையவரின் பாதுகைகளை வைத்து 'சாயை போல பாட வல்லார்'' என்ற பாசுர வரிக்குச் சரியான பொருள் கண்டுபிடித்த சம்பவம் குருபக்தி என்பது வரம் கொடுக்கும் உயிருள்ள காமதேனு என்பதை மக்களுக்கு உணர்த்தும். திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ரகசியம் புராணங்களை பொய்யில்லை என்று நிரூபிக்கும். ஸ்ரீராமானுஜருடைய வாழ்வில் நடந்த ஒவ்வொரு சம்பவமும் வைதிகத்துக்கு விளக்கமாய் வைணவத்துக்கு எடுத்துக் காட்டாய் அமைந்தது. வேதங்களில் விளங்காத விஷயங்களை இதிகாசங்களைப் படித்து தெரிந்து கொள்ளலாம், என்பது போல அசல் வைணவம் எப்படி இருக்கும் என்பதை பூர்வர்களின் வ்யாக்யானங்களில் இருந்தும் வரலாறுகளில் இருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

வேதம், உபநிஷதங்கள், இதிகாசங்கள், ஸ்மிருதிகள் இவை எல்லாவற்றையும் விட ஸ்ரீவைஷ்ணவ சாத்திரங்கள் எளிமையானவை, விளக்கமானவை, கலிகாலத்துக்கு உகந்தவை, எனவே உயர்ந்தவை. வேதமும் புராணங்களும் ஏட்டுப்படிப்பு (theory) என்றால் ஸ்ரீவைஷ்ணவ சாத்திரங்கள் நடைமுறை ஆய்வு முடிவுகள் (Lab test – results) எனலாம். இன்றைய வாழ்வில் வைதிகமும் வைணவமும் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலைமாறி இந்த நவநாகரீகக் காலத்தின் பிரச்னைகளுக்கான தீர்வுகளை உடனுக்குடன் அடையவும், உலகியல் வாழ்வில் செழிப்படைவதோடு ஆன்மீக சித்தியும் வளம்பெறவும், வைணவ சாத்திரங்கள் தாம் எளிய பாதைகள். இதை பல்கலைக் கழகங்கள் உணர வேண்டும். அரசின் கல்வி மேம்பாட்டுத் துறை உணர வேண்டும். வைணவச் சார்புடைய நாமும் உணர வேண்டும்.

மார்கழி மாதத்தில் திருப்பாவை படித்து விட்டு, சித்திரை திருவாதிரைக்கு 'பூமன்னுமாது' பாடிவிட்டு வைணவ இலக்கியத்துக்கு பூரண நியாயம் செய்துவிட்ட திருப்தியோடு நாம் வாழும் இந்த மேலோட்டமான போலி வைணவ வாழ்வு மாற வேண்டும். ஸ்ரீவைஷ்ணவ வ்யாக்யானங்களும், ரகஸ்ய க்ரந்தங்களின் பொருள் ஆழமும் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

வ்யஸனேஷு மதி: என்று சொல்லுவர்கள். துன்பகாலத்தில் நமக்கு உதவுவது நம் கல்வியறிவு தான். பசி, தாகம், குடும்பம், கோத்ரம் என்று நமக்குள்ள எல்லா ப்ரச்னைகளையும் நிஜவாழ்வில் சந்தித்து வாழ்க்கைப் பாதையை வெற்றிகரமாகக் கடந்து முக்திப் பயனடையும் அடைந்தவர்கள் நம் வைணவ முன்னோர்கள். அவர் தம் சிந்தையிலே தோன்றி சீரிய எழுத்துக்களாக வெளிவந்த சிறப்பான க்ரந்தங்கள் நம்மால் புறக்கணிக்கப்பட்டால் நம்மைப் பார்த்துச் சிரிக்க நாத்திகர்களும் தகுதி பெற்றோரே!